ரூ. 151,93,10,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்'' என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8–9–2001) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8–36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

–ஏதுமில்லை–

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. மாநிலப் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வாரியங்களின் செயல்திறன் குறித்த 1998–99 ஆம் ஆண்டு ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

84. மானியக் கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

85. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு–செலவு செயலாக்கத் திட்டம், 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

86. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த 'மக்கள் சாசனம்' 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

[2001 செப்டம்பர் 7

87. மானியக் கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

88. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

89. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த 'மக்கள் சாசனம்' 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

———

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS